# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆண்டிபட்டி.

முன்னிலை—திரு.அ.பாசில் முகமது,B.B.A.,LL.B(HONS)
நீதித்துறை நடுவர்
ஆண்டிபட்டி.
2026 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 05 ஆம் நாள் புதன்கிழமை
ஆண்டுபட்டிகை வழக்கு எண்:494/2025

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,
கண்டமனூார் காவல் நிலையம் ,
குற்ற எண்.125/2025. குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

1.ஹரீஸ்
2.கோபிகிருஷ்ணன்

எதிரிகள்

**<u>வழக்கின் சுருக்கம்</u>**

| வ. எண் | விவரம் | |
|---|---|---|
| 1. | இருதரப்பினர்களின் பெயர்கள் | |
| | குற்றமுறையீட்டாளர்:<br>கண்டமனூார் காவல் நிலையம்<br>குற்ற எண்.125/2025. | எதிரிகள் :<br>1.ஹரீஸ்<br>2.கோபிகிருஷ்ணன் |
| 2. | எதிரியின் வயது | A1-21<br>A2-22 |
| 3. | தந்தை/கணவர் பெயர் | A1– த.பெ.கருப்பசாமி<br>A2–த.பெ.முருகன் |
| 4. | மதம் | இந்து |
| 5. | தொழில் | கூலி |
| 6. | முகவரி | A1, A2–ஆண்டிபட்டி |



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.05 16:44:48 +0530

| | | |
|---|---|---|
| 7. | தாலுகா, மாவட்டம் | ஆண்டிபட்டி தாலுகா தேனி மாவட்டம் |
| 8. | சம்பவம் நிகழ்ந்த நாள் | 24.07.2025 |
| 9. | கைது | எதிரிகள் முன்பிணை |
| 10. | பிணையில் விடுவித்தல் | – |
| 11. | எதிரி சிறையில் இருந்த நாட்கள் | - |
| 12. | இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 14.10.2025 |
| 13. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி | 15.10.2025 |
| 14. | ப.நீ.சு.ச பிரிவு 230-ன் கீழ் நகல் வழங்கப்பட்ட தேதி | 05.02.2026 |
| 15. | ப.நீ.சு.ச பிரிவு 316–ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 09.02.2026 |
| 16. | விசாரணை துவக்கம் | 21.05.2026 |

| 17.சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள் | Witness | Chief | Cross |
|---|---|---|---|
| | PW1 | 21.05.2026 | 21.05.2026 |
| | PW2 | 23.06.2026 | 23.06.2026 |

| | | |
|---|---|---|
| 18. | ப.நீ.சு.ச பிரிவு 351 (1)(b)–ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 02.07.2026 |
| 19. | விசாரணை முடிவு | 02.07.2026 |
| 20.பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள் | | Crl,M.P.1485/2026<br>348 BNSS Petition allowed<br>Crl,M.P.1223/2026<br>359 BNSS Petition Dismissed |
| 21. | தீர்ப்பு விவரம் | 1 வது எதிரியின் மீது ப.நீ.சு.ச பிரிவுகள் 296(b), 118(1), 351(3), |



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.05 16:44:54 +0530

| | | |
|---|---|---|
| | | BNS கீழும், 2 வது எதிரியின் மீது ப.நீ.சு.ச பிரிவுகள் 296(b), 115(2), 351(3), BNS கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து, சந்தேகத்திற்கு இடமில்லாமல் அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்றும் எனவே, எதிரிகளை மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து ப.நீ.சு.ச பிரிவு 271(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 22. | தீர்ப்புரை நகலை வழங்குதல் | ஆம் |
| 23. | தலைமறைவாக இருந்த எதிரிகளின் விவரங்கள் | - |
| 24. | மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு | இல்லை. |
| 25. | பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு | இல்லை. |
| 26. | காலதாமதத்திற்கான காரணம் | 2026-ஆம் வருடத்தில் தான் அரசுத்தரப்பில் சாட்சிகள் முன்னிடப்பட்டது. |

*****

இவ்வழக்கானது, கடந்த 15.10.2025 ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்னால் இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்ற உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரி தரப்பில்



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.05 16:45:04 +0530

கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜெயக்குமார் அவர்களும் முன்னிலையாகி, முன்வைக்கப்பட்ட இருதரப்பு வாதுரைகளும் கேட்டறிந்தும், அரசு தரப்பு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் முன் விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## தீர்ப்புரை

1). அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:

கடந்த 24.07.2025 ம் தேதி 16.30 மணியளவில் வாதி தனது டி கடைக்கு அருகில் இருந்தபோது முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு 1 வது எதிரி மற்றும் 2 வது எதிரி ஆகியோர் வாதிக்கு அருகில் வந்து வாதியை பார்த்து இந்த தேவிடியா மகன் தான்டா என அசிங்கமாக பேசி 1 வது எதிரி எனது அப்பாவை ஏன் திட்டினீங்கடா புண்டா மகன்களா என அசிங்கமாக பேசி அவர் கையில் வைத்திருந்த கம்பை வைத்து வாதியின் வலது தோள்பட்டையில் அடித்தும் 2 வது எதிரி கையால் வாதியின் உடம்பில் அடித்தும் காயப்படுத்தியும், அப்போது ஊர் மக்கள் அருகேில் வரவே எதிரிகள் வாதியை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலைமிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரிகள் மீது கண்டமனூர் காவல் ஆய்வாளர் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2).இவ்வழக்கின் எதிரிகள், இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், வழக்கு தொடர்பான ஆவண நகல்கள் அனைத்தும் ப.நீ.சு.ச பிரிவு 230 கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, வழக்கிற்கான ஆரம்ப முகாந்திரம் இருந்த காரணத்தினால் 1 வது எதிரியின் மீது ப.நீ.சு.ச பிரிவுகள் 296(b), 118(1), 351(3), BNS கீழும், 2 வது எதிரியின் மீது ப.நீ.சு.ச பிரிவுகள் 296(b), 115(2), 351(3), BNS ன் கீழ் எதிரிகள் மீது, குற்றச்சாட்டுக்கள் வனைந்து,



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.05 16:45:10 +0530

எதிரிகளிடம் விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என மறுத்துரைத்துள்ளார்கள். எனவே, வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு,அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்ய, வழிவகை செய்யப்பட்டது.

3).அரசுத்தரப்பு வழக்கை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4). அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:

4.1). அ.சா.1 புகார்தாரர் ஆவார் சம்பவம் பற்றியும் தனக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.அ.சா.2 புலன்விசாரணை அதிகாரி ஆவார். அ.சா.1 கொடுத்த புகார் மனுவை பெற்று **அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை** பதிவு செய்தது பற்றியும், சம்பவ இடம் சென்று **அ.சா.ஆ.3** பார்வை மகஜர் மற்றும் **அ.சா.ஆ 4.**மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்தும் பின்பு அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து **அ.சா.ஆ.5 காயச்சான்று** பெற்றது குறித்தும் பின்பு எதிரிகளின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

5)அரசுத்தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள பொருண்மைகளை தொகுத்து 351(ஆ)–ன் கீழ் வினவியபோது, அரசு தரப்பு சாட்சியத்தை எதிரிகள் பொய் சாட்சியம் என்றும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

**6.** அரசு தரப்பு வாதம்

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது, அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலான சாட்சியங்களின்படியும், அ.த.சா.ஆ.1 முதல்



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.05 16:45:16 +0530

அ.த.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களின்படியும், எதிரிகள் மீதான அரசு தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது எனவும், எனவே, எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

7.எதிரிகள் தரப்பு வாதம்

கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் எதிரிகள் குற்றத்தை செய்தார்கள் என்று அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்றும் ஆகையால் வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை குற்றவாளிகள் அல்ல என்ற தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

8.தீர்க்கபட வேண்டிய பிரச்சனைக்குரிய கேள்வி

இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் எதிரிகள் மீதான ப.நீ.சு.ச பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3), 115(2), BNS கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

9. தீர்வு:–

9.1.)அரசு தரப்பு வழக்கானது, எதிரிகள் வாதியை அசிங்கமாக பேசி, காயத்தினை ஏற்படுத்தி கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்பதே ஆகும்.

9.2)ஆனால், இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 திரு.மலைச்சாமி தனது முதல் விசாரணை சாட்சியத்தில்" **ராஜேந்திரா நகரில் டீ கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் அவர்களது பெயர்கள் கோபி, ஹரீஸ். வழக்கு தொடர்பாக தற்போது சமாதானமாக செல்கிறோம். வழக்கினை மேல்நடத்த விருப்பம் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் அ.சா.ஆ.1"** என்று சாட்சியம் அளித்து அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதிலும் அரசு தரப்பிற்கு



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.05 16:45:22 +0530

ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

9.3) மேலும் எதிரிகள் ஆபாசமான வார்த்தைகளால் பேசியதாகவோ அதனால் யாருக்கேனும் தொல்லை அல்லது அருவருப்பு ஏற்பட்டதாகவோ எதிரிகள் வாதியை தாக்கியதாகவோ அதில் அவருக்கு காயம் ஏற்பட்டதாகவோ மேலும் எதிரிகள் வாதிக்கு கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றோ அதனால் வாதிக்கு அச்சமோ பீதியோ ஏற்பட்டதாகவோ சாட்சியங்கள் இல்லை.

9.4)மேலும் புகார்தாரரான அ.சா.1ன் சாட்சியம் இவ்வாறாக உள்ள நிலையில் புலன் விசாரணை தொடர்பாக அளிக்கப்பட்ட புலன்விசாரணை அதிகாரியான அ.சா.2ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, எதிரிகள் மீதான வழக்கினை தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

9.7)மேற்காண்ட சூழ்நிலைகளும், அ.சா.1ன் சாட்சியமும், எதிரிகள் மீதான அரசு தரப்பு வழக்கின் மீது பெரும் சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக்கி, அவரை விடுதலை செய்வது நீதியின்பால் உகந்தது என கருதி, அவ்வாறே தீர்மானித்து, மேற்காண்ட பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

**<u>10. முடிவாக</u>**

1 வது எதிரியின் மீது ப.நீ.சு.ச பிரிவுகள் 296(b), 118(1), 351(3), BNS கீழும், 2 வது எதிரியின் மீது ப.நீ.சு.ச பிரிவுகள் 296(b), 115(2), 351(3), BNS கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து, சந்தேகத்திற்கு இடமில்லாமல் அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்றும் எனவே, எதிரிகளை மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து ப.நீ.சு.ச பிரிவு 271(1) ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

11.இவ்வழக்கு வழக்கு தடய சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.05 16:45:27 +0530

ஆகையால் வழக்கு தடய சொத்து  குறித்து உத்தரவு இல்லை

12.எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 05 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் வைத்து, அவையறிய பகரப்பட்டது.

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.05 16:45:33 +0530

நீதித்துறை நடுவர்
ஆண்டிபட்டி.

குறிப்பு:

1. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது,

2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை,

3.விசாரணையின்போது எதிரிகள் பிணையிலிருந்து முன்னிலையானார்.

1. அரசுத்தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திரு.மலைச்சாமி |
| 2 | அ.சா.2 | திரு.தாமரைக்கண்ணன் |

2). அரசு தரப்புசான்றாவணங்கள்:

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | புகார் |
| 2 | அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை |
| 3 | அ.சா.ஆ.3 | பார்வை மகஜர் |
| 4 | அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் |
| 5 | அ.சா.ஆ.5 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |

3). அரசுத் தரப்பு சான்று பொருள்:

இல்லை

4). எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்று பொருள்:

இல்லை.

FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.08.05 16:45:38 +0530

நீதித்துறை நடுவர்

ஆண்டிபட்டி.